செ. கு. எண்: 40 நாள்: 07.03.2019

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 7.3.2019</u>

தருமபுரி மாவட்டம், ஆயுதப்படை காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ர. குமரன்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி உட்கோட்டம், நெடுஞ்சாலை ரோந்து பிரிவில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. தி. கோவிந்தராஜ்;

சென்னை பெருநகர காவல், புனித தோமையார் மலை காவல் நிலைய குற்றப் பிரிவு ஆய்வாளர் திரு. M.சிவராம் குமார்;

திருச்சி மாநகரம், கோட்டை குற்றப் பிரிவு காவல் நிலைய காவலர் திரு. ம. சதீஸ்குமார்;

சென்னை பெருநகர காவல், எழும்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெண் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திருமதி எஸ். ரோசி இமாகுலேட்;

மதுரை மாவட்டம், மாவட்ட குற்றப் பதிவேட்டுக் கூடம், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. தங்கராஜ்;

மதுரை மாநகரம், அவனியாபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. K. சந்திரசேகரன்;

தேனி மாவட்டம், போடி போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ். முருகேசன்;

திருச்சி மாநகரம், ஏர்போர்ட் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. முகமது ஜான் நிவாஸ்;

கரூர் மாவட்டம், வாங்கல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி C. சாந்தி;

புதுக்கோட்டை மாவட்டம், ஆயுதப்படை பிரிவில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ம. பெஞ்சமின்;

சிவகங்கை மாவட்டம், சாலைகிராமம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. இ. அந்தோணி ராஜ்;

திருவாரூர் மாவட்டம், வடுவூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ். சண்முகம்;

––– ஆகியோர் உடல் நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு சிறப்பு காவல் படை 11 ஆம் அணியில் (ராஜபாளையம்) காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆர். ரமேஷ்;

இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. பொ. ராஜ்கண்ணன்;

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் நகர் போக்குவரத்து காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. P.பேச்சிமுத்து;

விழுப்புரம் மாவட்டம், பிரம்மதேசம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. பாலசுப்ரமணியன்;

சென்னை பெருநகரக் காவல், ஆயுதப்படை "அ" நிறுமம், 5 ஆம் அணியில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. எம். ராஜபாண்டி;

சென்னை பெருநகரக் காவல் ஆயுதப்படை "ஈ" நிறுமம் 22ம் அணியில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. B.தினேஷ்;

சென்னை பெருநகரக் காவல், செங்குன்றம் காவல் நிலையக் குற்றப்பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. V. கருப்பசாமி;

கடலூர் மாவட்டம், ஒரத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. R. பாண்டியன்;

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்த வந்த திரு. அ. வீரமுத்து;

இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட ஆயுதப்படையில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆ. மொட்டையன்;

கோயம்புத்தூர் மாவட்டம், நெகமம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. த. செந்தில் முருகன்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் சிறப்பு இலக்குப் படையில் (தாயணி ஈரோடு மாவட்ட ஆயுதப்படை) தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. செ. ஆறுமுகம்;

காஞ்சிபுரம் மாவட்டம், கல்பாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.K. துரை;

சென்னை பெருநகரக் காவல், ஆயுதப்படை–1, "C" நிறுமம், 15 ஆம் அணியில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. து. அசோக் குமார்;

விழுப்புரம் மாவட்டம், வளத்தி காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. அ. ஷாகுல் அமீத்;

––– ஆகியோர் சாலை விபத்துக்களில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

உடல் நலக்குறைவு மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்த 28 காவலர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட பல்வேறு துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **28 காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**